# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 74/ந/2025, நாள் 03.11.2025

| | | |
|---|---|---|
| அரங்க. பார்த்தீபன்<br>விழுப்புரம் மாவட்டம் | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையர்,<br>விழுப்புரம் நகராட்சி, விழுப்புரம் மாவட்டம். | – | எதிர்மனுதாரர் |

விழுப்புரம் மாவட்டம், சரஸ்வதி நகர் அருகில், அரங்கநாதன் அவின்யூ, எண்.1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. அரங்க. பார்த்தீபன் என்பவரது 20.02.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.02.2025 அன்று பெறப்பட்டு, 74/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

விழுப்புரம் மாவட்டம், சரஸ்வதி நகர் அருகில், அரங்கநாதன் அவின்யூ, எண்.1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. அரங்க. பார்த்தீபன் என்பவரின் 20.02.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“நான் விழுப்புரம் நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணியாற்றிய பொழுது 5–வது ஊதியக் குழு நிலுவை மற்றும் அகவிலைப்படி நிலுவைகள் 1/92, 4/92, 7/92 to 9/92 மற்றும் 1/93 to 4/93 – ஆகியவை அரசின் ஆணைக்கேற்ப வழங்கப்படாமல் அன்றைய காலக்கட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட்டன. அதன் பின்னர் அத்தொகைக்குரிய அசல் மற்றும் வட்டி விவரங்களுடன் உரிய பதிவேடுகள் பராமரித்திடவும், அத்தொகையினை சம்மந்தப்பட்ட ஊழியர்களுக்கு வழங்கிடவும் அரசால் அறிவுறுத்தப்பட்டது.

விழுப்புரம் நகராட்சியிலிருந்து பணியிட மாறுதல் பெற்றுச் சென்ற நகராட்சிகளுக்கு அத்தொகையினை வழங்கிடக்கோரி பலமுறை வலியுறுத்தியும் அத்தொகை வழங்கப்படவில்லை.

நான் தற்பொழுது பணிநிறைவு பெற்று உள்ளேன். எனவே, எனக்கு வழங்க வேண்டிய 5–வது ஊதியகுழு அசல் மற்றும் அதற்குரிய வட்டி, அகவிலைப்படி நிலுவை 1/92, 4/92, 7/92 மற்றும் 1/93 to 4/93 முடிய உள்ளவற்றிற்கான அசல் மற்றும் வட்டித் தொகையினை வழங்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் குறித்து விழுப்புரம் நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 13.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. விழுப்புரம் நகராட்சி ஆணையரின் 01.09.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.2638/2025/சி2–ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"திரு. R. பார்த்தீபன் என்பவர் நெல்லிக்குப்பம் நராட்சியில் பணியாற்றி 31.10.2022 அன்று ஓய்வு பெற்றுவிட்டார். மேலும் அன்னார் இந்நகராட்சியில் 09.01.1984 முதல் 08.06.1993 வரை இளநிலை உதவியாளராக பணிபுரிந்துள்ளார். அன்னார் கேட்கும் 5–வது ஊதியக்குழு நிலுவை குறித்து தனியரின் பணி பதிவேடு அனுப்பிவைக்குமாறு இந்நகராட்சியின் 11.04.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண். 2638/2025/சி2–ல் ஆணையர் நெல்லிக்குப்பம் நகராட்சி அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது. எனவே, அன்னாரது பணி பதிவேடு வரப்பெற்று ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு நிலுவைத் தொகை வழங்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையர் ஆகியோரை 02.09.2025 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ளுமாறு 19.08.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. அரங்க பார்த்தீபன் என்பவர் 02.09.2025 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக கலந்து கொண்டு கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

"நான் விழுப்புரம் நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணியாற்றிய பொழுது 5–வது ஊதியக்குழு நிலுவை 2015 முதல் அகவிலைப்படி நிலுவைகள் 1/92, 4/92, 7/92 to 9/92 மற்றும் 1/93 to 4/93 ஆகியவை அரசின் ஆணைக்கேற்ப வழங்கப்படாமல் அன்றைய காலகட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட்டன. அதன்பின்னர் அத்தொகைக்குரிய அசல் மற்றும் வட்டி விவரங்களுடன் உரிய பதிவேடுகள் பராமரித்திடவும், அத்தொகையினை சம்மந்தப்பட்ட ஊழியர்களுக்கு வழங்கிடவும் அரசால் அறிவுறுத்தப்பட்டது.

விழுப்புரம் நகராட்சியிலிருந்து பணியிட மாறுதல் பெற்றுச் சென்ற நகராட்சி பணியாளர்களுக்கு அத்தொகையினை வழங்கிடக்கோரி பலமுறை வலியுறுத்தியும் அத்தொகை வழங்கப்படவில்லை.

சேமநலநிதி (PF) பதிவேடு ஒழுங்காக பராமரிக்கப்படாமல் தொலைந்து போய்விட்டது. தகவல் உரிமை சட்டத்தின் கீழ் விபரம் கோரப்பட்டது. ஆனால் இதுவரை உரிய தொகைகள் வழங்கப்படவில்லை.

நான் தற்பொழுது பணிநிறைவு பெற்று உள்ளேன். எனவே, எனக்கு வழங்க வேண்டிய 5–வது ஊதியக்குழு அசல் மற்றும் அதற்குரிய வட்டி, அகவிலைப்படி நிலுவை 1/92, 4/92, 7/92 மற்றும் 1/93 to 4/93 முடிய உள்ளவற்றிற்கான அசல் மற்றும் வட்டித் தொகையினை வழங்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரான விழுப்புரம் நகராட்சி ஆணையர் 02.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"திரு. அரங்க பார்த்தீபன் என்பவர் நெல்லிக்குப்பம் நகராட்சியில் பணியாற்றி 31.10.2022 அன்று ஓய்வு பெற்று விட்டார். மேலும் அன்னார் இந்நகராட்சியில் 09.01.1984 முதல் 08.06.1993 வரை இளநிலை உதவியாளராக பணிபுரிந்துள்ளார். அன்னார் கேட்கும் 5–வது ஊதியக்குழு நிலுவை குறித்து தனியரின் பணிபதிவேடு அனுப்பிவைக்குமாறு விழுப்புரம் நகராட்சி ஆணையரின் 11.04.2025 நாளிட்ட கடித ந.க எண்.2638/2025/சி2-ல் ஆணையர் நெல்லிக்குப்பம் நகராட்சி அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது. பணிபதிவேடு கண்டறியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். கண்டறியாத பட்சத்தில், அன்னாரது பணி பதிவேடு வரப்பெற்று ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு நிலுவைத் தொகை வழங்கப்படும் என்பதை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, ஆணையரின் வாக்குமூலம் மற்றும் இதர ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் விழுப்புரம் நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணியாற்றிய பொழுது 5–வது ஊதியக்குழு நிலுவை தொகைக்கான அகவிலைப்படி 1/92, 4/92, 7/92 to 9/92 மற்றும் 1/93 to 4/93 ஆகிய காலங்களுக்கு வழங்கப்படவில்லை எனவும், மேற்படி காலங்களுக்கான அகவிலைப்படித் தொகையினை

வட்டியுடன் வழங்க அரசால் அறிவுறுத்தப்பட்டும், தான் பணிநிறைவு பெற்று உள்ளதால் மேற்படி அகவிலைப்படி நிலுவைத் தொகையினை வட்டியுடன் வழங்கிட கேட்டுக்கொண்டுள்ள விவரம் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறியவருகிறது.

மனுதாரர் விழுப்புரம் நகராட்சியில் **09.01.1984** முதல் **08.06.1993** வரை இளநிலை உதவியாளராக பணியாற்றி **31.10.2022** அன்று நெல்லிக்குப்பம் நகராட்சியில் ஓய்வு பெற்று விட்ட நிலையில், மனுதாரர் கோரிய தொகை குறித்த விவரங்களை அறியும் பொருட்டு, அன்னாரின் பணிபதிவேட்டினை அனுப்பிவைத்திட நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பணி பதிவேடு வரப்பெற்றதும், ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு நிலுவைத் தொகை வழங்கப்படும் எனத் தெரிவித்திருப்பது எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறியமுடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் **1/92, 4/92, 7/92 to 9/92** மற்றும் **1/93 to 4/93** காலங்களுக்கான அகவிலைப்படி நிலுவைத் தொகை விழுப்புரம் நகராட்சியில் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து அதனைப் பெற்று தர கோரியுள்ளார். மனுதாரரின் அகவிலைப்படி தொடர்பான விவரங்கள் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டிருப்பதை அறிய நெல்லிக்குப்பம் நகராட்சியிலிருந்து மனுதாரரின் பணிப்பதிவேடு பெறப்பட்டு ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையரின் அறிக்கையினை ஏற்று, மனுதாரருக்கு மேற்படி காலங்களுக்கான அகலவிலைப்படி வழங்குவது தொடர்பான நடவடிக்கையினை துரிதப்படுத்திடவும், அது குறித்து விவரத்தினை மூன்று மாதத்திற்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்திடுமாறு விழுப்புரம் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**2025**–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் **03**–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. அரங்க.பார்த்தீபன்
   எண்.01, அரங்கநாதன் அவின்யூ,
   சரஸ்வதி நகர் அருகில்,
   விழுப்புரம் – **605 602.**
2) நகராட்சி ஆணையர்,
   விழுப்புரம் நகராட்சி,
   விழுப்புரம்.
3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – **600 028.**
4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – **600 028.**

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

6/11/25
செயலாளர்

7/2
6/11/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032